**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 221/2020.**
**அ.சா. 7 – திரு.சங்கையா ராஜா.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.07.2026.

* * * * * * *

**(எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அ.சா.7 மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

(1) நான் காயம்பட்ட நபரை 29.05.2020 ஆம் தேதி இரவு 09.50 மணிக்கு சிகிச்சை வழங்கினேன். நான் போலீசார் விசாரணையில், காயம்பட்ட நபரை 30.05.2020 ஆம் தேதியன்று காலை 09.00 மணிக்கு சிகிச்சை அளித்ததாக வாக்குமூலம் கொடுத்துள்ளேனா? என்றால், இல்லை. காயம்பட்ட நபர் மேல்சிகிச்சைக்காக எங்களது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார். ஒரு நபர் மேல் சிகிச்சைக்காக அனுப்பப்படும்போது, அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை விவரங்கள் என்னிடம் கொடுக்கப்படும் என்றால், சரிதான். விபத்துப் பதிவேட்டில் காயம்பட்ட நபர் எந்த ஆயுதத்தால் தாக்கினார் என எதுவும் குறிப்பிட்டுள்ளாரா? என்றால், விபத்துப் பதிவேட்டில் பொருள் என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேல்சிகிச்சைக்காக எங்களிடம் வரும்போது, காயத்தின் தன்மை அறிவதற்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதம் பற்றி கேட்டுத் தெரிந்துகொள்வோம்.

(2) காயம்பட்ட நபர் தன்னை கத்தியால் குத்தியதாக தெரிவித்ததை நான் அவருடைய மருத்துவ சிகிச்சை தொடர்பான ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளேன். காயம்பட்ட நபர் கத்தியால் குத்தியதாக எதுவும் சொல்லவில்லை என்றாலும், நான் போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில், கத்தியால் குத்தியால் குத்தி காயம் ஏற்பட்டதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. கத்தியால் குத்தியிருந்தால் முதல் சிகிச்சை அளித்த மருத்துவரிடம் அதுபற்றி காயம்பட்ட நபர் தெரிவித்திருந்திருப்பார் என்றால், நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சான்று வழங்கியுள்ளேன் என்றால், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.27 19:03:33 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**